இருக்கிறார்கள். ரெக்ரூட்மெண்ட் பாலிசியைப் பொறுத்த அளவுக்கு, நாம் சில கொள்கைகள் போர்டில் வைக்கிறோம். ஓரளவுக்கு அதிகச் சம்பளம் உள்ளவர்களை போர்டின் அனுமதியோடு போடவேண்டும். அதற்குக் குறைந்த சம்பளம் உள்ளவர்களை குழுவில் பரீட்சை வைத்து, இண்டர்வியூ வைத்துப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நிச்சயம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகிறோம்.

Assignment of Land in Thalakkavoor village, Ramanathapuram district

*9 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) Whether the Government have received any application requesting to assign land in Thalakkavoor village, Ramanathapuram district; and

(*b*) if so, the action taken thereon by the Government?

இராமநாதபுரம் மாவட்டம், தளக்காவூர் கிராமத்தில் நில ஒப்படைப்பு

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தளக்காவூர் கிராமத்தில், நில ஒப்படைப்பு கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 1971 மேலும் 1972ம் ஆண்டுகளில் தளக்காவூர் கிராமத்தில் நில ஒப்படைப்பு கோரி 59 நபர்கள் விண்ணப்பம் செய்தனர். அவர்களுக்கு 80.73 ஏக்கர் நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

Entertainments Tax collected from the Madras Race Club, Guindy, Madras

*10 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the entertainments tax collected by the Government from the Madras Race Club, Guindy, Madras, for the last five years?

1974 சனவரி 19]

சென்னை, கிண்டி, குதிரைப் பந்தயச் சங்கத்திடமிருந்து வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை, கிண்டி, குதிரைப் பந்தயச் சங்கத்திடமிருந்து கடந்த ஐந்தாண்டுகளில் அரசினால் வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கிண்டி, மெட்ராஸ் ரேஸ் கிளப்பிலிருந்து கீழ்க்கண்ட விவரப்படி கேளிக்கைவரி வசூலிக்கப்படுகிறது.

1968-69—ரூ. 11,20,588.66.

1969-70—ரூ. 10,59 862.05.

1970-71—ரூ. 12,75,521.58.

1971-72—ரூ. 11,94,441.81.

1972-73—ரூ. 7,07,160.50.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, 1972-73-ல் ஏழுலட்சத்திச் சொச்சம் வருவாய் என்று கூறினார்கள். மற்ற ஆண்டுகளில் 12 இலட்சம், 13 இலட்சம் என்று கூறினார்கள். ஒரு ஆண்டில் மட்டும் ஏழு இலட்சமாகக் குறைந்ததற்குக் காரணம் ஏதாகிலும் உண்டா என்று அறிய விரும்புகிறேன். அந்தக் களியாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறைந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: புக்கீஸ் அபாலிஷன் செய்ததன் காரணமாகக் குறைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

Employees of the Pasteur Institute, Coonoor

* 11 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the employees of the Pasteur Institute, Coonoor have submitted any petition to the Labour Officer to redress their grievances ; and

(*b*) if so, the action taken thereon?